# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 38வது கூட்டறிக்கை 2021.04.20

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 38வது அமர்வு 2021.04.20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப 3.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. | ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. | திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 38வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இன்று நம் மத்தியில் எமது வளத்தாப்பிட்டி வட்டாரத்தின் புதிய அங்கத்தவராக திருமதி கனேசசுந்தரம் குலமணி அவர்கள் இன்று இந்த சபைக்கு சமூகமளித்திருக்கின்றார்கள். அவரை இந்த ஊர் சார்பிலும், இந்த சபை சார்பிலும் வரவேற்று, உங்களுக்கு உரிய நேரத்தில் உரையாற்றுவதற்கு நான் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவேன். இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இதை ஏற்கனவே உங்களுக்கு நேர காலத்தோடு அனுப்பி உங்களின் கருத்துகளை கேட்டிருந்தோம். எவரும் திருத்தங்கள் அனுப்பியதாக இல்லை. அப்படியானால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்ற அமர்வின் பின் நமது சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட PSDG முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் தரப்பட்டு நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. முடிவுகள் எடுக்கும் போது அதைப் பற்றி பேசலாம். உங்கள் எல்லோருக்கும் நான் உங்களின் பகுதிகளில் Road Inventory பிரதிகளை தந்து வட்டார GS Division பிரிவுகளின் விபரங்களையும் தந்திருந்தேன். ஆனால் துரதிஸ்டவசமாக கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களைத் தவிர, இன்று அவர் சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவரைத் தவிர வேறு ஒருவரும் இன்னும் இந்த விபரங்களை தரவில்லை. இன்று கூட PSDG முன்னேற்ற கூட்டத்தில் Road Inventory ஒழுங்காக கொடுக்கப்படாத சபைகளுக்கு எதிர்காலத்தில் பாதைகள் நாம் முன்மொழியும் போது ஒரு தடையாக வரலாம். உங்கள் Inventory இல் இல்லாமல் எப்படி நீங்கள் பாதைகளை பிரேரிக்கின்றீர்கள் என்று,

தயவு செய்து சிறிது நேரம் எடுத்து உங்களது வட்டாரத்திற்குள் 30, 40 வீதிகள் வரும். அத்தனை வீதிகளும் சரியா இருக்கின்றது என்று பார்த்தால் எல்லோரும் தரும் போது ஊரின் Inventory யோ சரியாகும். GS Division பிரிப்பதில் உங்களுக்கு அக்கறை இல்லாவிட்டால் நாம் சபை ஒரு முன்மொழிவு வைக்காமல் தனித்தனியே முன்வைப்போம். ஆனால் சபை என்று கோரப்படுகின்ற போது சபையின் மூலம் கொடுப்பது மிகவும் செல்வாக்கு உடையதாக இருக்கும். உங்களுக்கு தரப்பட்டிருக்கின்ற பிரதி அரசாங்க உத்தியோகத்தரினால் முன்மொழியப்பட்டது. அது அவர்களின் முன்மொழிவு உண்மையாக நான் உத்தியோகபூர்வமாக அதை தந்திருக்க இயலாது. தந்தது ஒரு வழிகாட்டியாக அதை மையமாக வைத்து நாம் திருத்தங்கள் செய்ய வேண்டுமானால் திருத்தங்களை செய்து நியாயப்படுத்தலாம். நியாயப்படுத்தி சபையினால் கொடுப்பது நிச்சயமாக அது வலுவாக இருக்கும். அதையும் வருங்காலங்களில் செய்வதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/38/01**

சென்ற மாதம் 2021.03.01 தொடக்கம் 2021.03.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வருமானங்களை பார்த்தீர்களானால் 03 மாதத்திற்கு சபையின் சொந்த வருமானம் 20.6 மில்லியன். இந்த மாதம் வழமைக்கு வந்ததால் மொத்தமாக 5 மில்லியன் உழைத்திருக்கின்றோம். அதை கணிப்பாக வைத்து அவசரமாக செய்ய வேண்டிய வேலைகள் நாம் செய்யத்தான் வேண்டும். ஆனால் புதிதாக அபிவிருத்தி வேலைகள் செய்வது என்றால் நமக்கு நிதி கிடைக்கும் பட்சத்தில் தான் செய்ய முடியும் என்ற நிலைப்பாடு இன்று இருக்கின்றது. வீதிகளுக்கு பெயரிடல் சம்மந்தமான முயற்சி ஒன்று கௌரவ உப தவிசாளர் தலமையில் செய்திருந்தோம். அந்த முயற்சி செய்து முடிக்கவில்லை. அதனால் Pensioners Welfare Association தந்திருக்கின்றார்கள் தாங்கள் உதவலாம் என்று, அவர்களின் உதவியோடு பிரதித் தவிசாளரின் தலமையில் மீண்டும் பெயரிடல் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/38/02**

தகுதியான உத்தியோகத்தர்களுக்கு பெருநாள் விழா முற்பணம் வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/38/03

CBG/PSDG – 2021 கீழ்வரும் வேலைத்திட்டங்கள் உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றினை சனசமூக நிலையங்கள் மூலம் மேற்கொள்வதற்கான பிரேரணை.

1. Provide Funds for furniture to Sennelkiramam reading room – 0.300m
2. Construction of concrete surface road (Balance Work) APC Rd, Malwathai – 0.700m
3. Purchasing 500 Lt(100) Water Tanks for issuing Malligaithivu – 0.500m
4. Purchasing Segregation bins (700) for issuing at Sammanthurai PS – 0.350m
5. Extension of tipper for Solid Waste Management Systems – 0.150m
6. Construction of Bus Halt at Walathapitty – 0.167m
7. Construction of Bus Halt at Malwathai Near Post Office Building – 0.167m
8. Construction of Bus Halt at Malwathai School Front (Kal – Am Rd Left side) – 0.167m
9. Construction of Kallarichal Children Park Watcher Hut – 0.299
10. Improvement of Udangawatta bund road at Malwatta – 01 (200m) – 0.2 Mn
11. Construction of Bus Halts at Poomaraththu Junction – New Mosque – 0.3Mn

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/38/04

சபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் (TEC) இருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருவரும் வருடாந்த இடமாற்றம் மூலம் வேறு அலுவலகங்களுக்குச் சென்றுள்ளனர். அவர்களுக்கு பதிலாக எமது அலுவலகத்திலிருந்து Mr.M.M.M.முஸ்தபா (TO) என்பவரையும், பிரதேச செயலகத்தில் இருந்து Mr.A.J.M.றிஸ்வான் (TO) என்பவரையும் புதிதாக நியமிப்பதற்கும் மற்றும் கணனி, இலத்திரனியல் சார்ந்த பொருட்களை கொள்வனவு செய்கின்ற போது தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவராக தொழில்நுட்பக் கல்லூரியின் தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளராக கடமையாற்றும் Mr.M.M.சியாத் என்பவரை நியமிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பயிலுனர்களில் 2 வகை இருக்கின்றது. ஒன்று VTA, Technical College இல் இருந்து வருபவர்கள். அவர்கள் 06 மாதத்திற்கு கொடுப்பனவுடன் இருப்பார்கள். அவர்களுக்கு முடிந்த பின்னர் அடுத்த 06 பேர் வருவார்கள். அதே நேரம் திட்டமிடல் பிரிவில் Road Inventory வேலைகள் செய்வதற்காக 02 அல்லது 03 பேருக்கு கொடுப்பனவு கொடுப்பது வழக்கம். தற்போதும் இரண்டு பேர் இருக்கின்றார்கள். சிலர் Volunteers ஆக வருகின்றார்கள். Volunteers ஆக வருபவர்களில் அந்தப் பகுதிக்குரிய பொறுப்பதிகாரி சிபார்சு செய்து, செயலாளரும் சிபார்சு செய்து அவர்களுக்கு கொடுப்பனவு கொடுத்து நமக்கு தேவையான காலத்தில் வைத்திருப்பதற்காக தீர்மானம் எடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/38/05**

தொழில் பயிற்சி நிறுவனங்களில் இருந்து பயிற்சி பெற வருகின்ற 06 பயிலுனர்களை பயிற்சிக்காக (பயிலுனர்களாக) சேர்த்துக் கொள்வதற்கும் சபை நிதியில் இருந்து 04/2017 இலக்க சுற்று நிருபத்திற்கமைய மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/38/06**

தற்போது Road Inventory, மற்றும் வரைபட, தொழிநுட்ப பணிகளில் ஈடுபடும் பயிலுனர்களுக்கு பிரயாண ஊக்குவிப்பாக மாதம் ஒன்றிற்கு ரூபா 6000.00 கொடுப்பனவு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஆதன வரி தொடர்பாக புது வட்டாரங்களை Assessment செய்திருக்கின்றோம். அவர்களுக்கு 03 மாதத்திற்குள் ஆதனவரியினை செலுத்தினால் அந்த 10% கழிவு வழங்கப்படுவதில்லை. புது வட்டாரங்களுக்கு K form கொடுத்து 03 மாதத்திற்குள் கட்டுபவர்களுக்கு 10% கழிவு வழங்க சபை ஒரு தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் - 04/38/07**

புதிதாக சேர்க்கப்பட்ட வட்டாரங்களுக்கு ஆதனவரி அறவிடுவதற்காக வழங்கப்படும் K Form கொடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 03 மாதத்திற்குள் ஆதன வரியினை செலுத்துவோருக்கு, 10% கழிவு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில், கோயில் நிர்வாகத்தின் காணி அன்பளிப்பில், நிர்ணயிக்கப்பட்ட நூலகம் திறக்கப்பட வேண்டும். அதற்கு முதல் புத்தகங்கள் கொள்வனவு செய்ய வேண்டும். புத்தகங்கள் வாங்குவதற்குரிய List சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அது நிர்வாக ரீதியில் நூலகரிடம் சென்று அவர்களின் சிபார்சோடு செய்வோம்.

**தீர்மானம் - 04/38/08**
புதிதாக நிர்மானிக்கப்பட்ட வீரமுனை நூலகத்திற்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அலுவலகத்தில் இருக்கின்ற Telephone System 2015ம் ஆண்டு போடப்பட்டு Intercom வேலை செய்வதில்லை. ஸ்ரீ லங்கா டெலிகொம் உடன் செய்ததற்கு காரணம் அரச நிறுவனம் என்ற படியினால் நமக்கு Tender Call பண்ண தேவையில்லை. தற்போதும் அவர்கள் வந்து இது பழைய System. புதிதாக ஒரு System கொள்வனவு செய்ய வேண்டும். புதிதாக அதே முறையில் வாங்குவது என்றால் அதற்கு தரக்கூடிய Instrument இல்லை. அவர்கள் தற்போது ஒரு Proposal தந்திருக்கின்றார்கள் Wiring செய்து ஒவ்வொரு மேசையிலும் அந்த Phone வைப்பதற்கு ஏறத்தாள ஆரம்ப செலவாக 06 இலட்சம் தேவைப்படுகின்றது. இதை TEC, Telecom நிபுணர்கள் கொண்ட குழுவை செயலாளர் தலைமையில் உருவாக்கி அதை தீர விசாரித்து மற்ற நிறுவனங்களில் இருந்து Quotation எடுத்து செய்வதற்கு சபையின் தீர்மானம்.

**தீர்மானம் - 04/38/09**
அலுவலகத்தில் இருக்கின்ற Telephone Intercom System பழைய System என்பதால் அதற்குரிய தொழிநுட்ப, உபகரண மாற்றங்கள் தற்போது இல்லாத காரணத்தினால், அதனை புதிதாக மாற்றுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, Telecom நிபுணர்கள் கொண்ட குழுவினை உருவாக்கி, Intercom System ஐ கொள்வனவு செய்து நடைமுறைப்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமக்கு இருக்கின்ற பிரச்சினைகள் உடைந்த கல்வெட்கள் எப்படியும் திருத்த வரும். ஏனென்றால் அரசாங்கம் இதை செய்வதில்லை. வீதிதான் செய்கின்றார்கள் கல்வெட்டை செய்கின்றார்கள் இல்லை. இந்தப் பிரச்சினை மகளிர் சங்கம், GS, அதுமட்டுமல்ல FaceBook இலும் போட்டு தவிசாளர் தார் Road இங்காலதான் சேவை செய்கின்றார் என்று, அதற்குதான் செயலாளரிடம் சொன்னேன் வருடத்தில் எவ்வளவு கிராமிய புரங்களுக்கு செலவளிக்கின்றோம் என்பதை மக்களிடம்

சொல்ல வேண்டும். சாலி வீதியில் இருக்கின்ற 02 கல்வெட் உடைந்தது. கல்வெட் உடைவதற்கு ஒருவரும் பொறுப்பு எடுக்கின்றார்கள் இல்லை. Tipper இனால் தான் உடைகின்றது என்று தெரியும். ஆனால் அந்த Tipper இன் இலக்கத்தையாவது தந்தால் நாம் பொலிஸிடம் அறிவித்து ஒரு Action எடுக்கலாம். ஆனால் ஒருவரும் முன் வருவதில்லை. ஆலமரத்தடி Drainage கிட்டத்தட்ட 03 வருடமாக பிரச்சினை. RDA Guide படி இருக்கும் பாதைகளை மட்டும் தான் அவர்கள் பாரம் எடுப்பார்கள். சேதமடைந்த கல்வெட்கள் எல்லாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அல்லது சபையின் நிதியில் செய்கின்ற நிலைப்பாடுதான் வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 02 பாலங்கள் உடைந்திருக்கின்றது. ஒன்று அம்பாரை 05ம் வீதி, மற்றது ராசா லேன் 02 பாலமும் நடுவால் உடைந்திருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உடைந்தவைகளை நாம் கட்டாயம் செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கு அருகாமையில் இருக்கின்ற கல்வெட்டும் செய்ய வேண்டி இருக்கின்றது.

**தீர்மானம் - 04/38/10**
பின்வரும் கல்வெட்களை திருத்துவதற்கான பிரேரணை.

1. Renovation of Con. Sur. Culvert at Aalamarathadi Drainage Block J west – 02 – Rs.710,000.00
2. Con. of Demolished Drainage at Al – Arsath Road – Rs.120,000.00
3. ஹாஜியார் வீதியை சந்திக்கும் ராசா லேனின் உள்ள கல்வெட்
4. அம் 5ம் வீதியில் உள்ள கல்வெட்
5. கைகாட்டி சிறுவர் பூங்கா அருகில் உள்ள கல்வெட்
6. வளத்தாப்பிட்டி சக்தி வீதி கல்வெட் அமைத்தல்
7. நூர்ப்பள்ளி வீதி கல்வெட் - 215,000.00
8. குளட்டர் லேன் கல்வெட் - 180,000.00

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் கால தாமதத்தோடு முன்மொழிவுகளை செய்வதில்லை. 07 நாட்களுக்குள் அந்த முன்மொழிவு வராவிட்டால் அது ஒரு பிரேரணையாகவோ அல்லது கேள்வியாகவோ ஏற்க வேண்டிய கட்டாயம் தவிசாளருக்கு இல்லை. இவ்வளவு காலமும் அது ஒரு கட்டாயமாக இல்லாமல் அதன் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு நாம் நடந்து கொண்டு வந்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் கௌரவ உறுப்பினர் திருமதி கனேசசுந்தரம் குலமணி அவர்கள் சில விடயங்களை குறிப்பிட்டு இருந்தார். இந்த விடயங்கள் எல்லாம் ஏலவே இந்த சபையில் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டவை. உதாரணத்திற்கு வளத்தாப்பிட்டி பாலர் பாடசாலையை பிரதேச சபையின் கீழ் இணைத்துக் கொள்ளல். பிரதேச சபையின் கீழ் பாலர் பாடசாலை இல்லை. அது மாகாண சபையின் கீழ் இயங்குகின்றது. அதனால் அதை செய்ய இயலாது. இப் பிரேரணை முன்னாள் கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்து அது சபையில்

விவாதிக்கப்பட்டது. அடுத்தது வளத்தாப்பிட்டி கூட்டுறவுக் கடை கிராம சேவகர், சமூர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகமாக செயற்பட பெற்றுக் கொள்ளல். இந்தக் கட்டடங்கள் எல்லாம் பிரதேச செயலாளரின் கீழ் வரும். பிரதேச செயலாளருக்கு நாங்கள் ஏற்கனவே இதைப் பற்றி எழுதி இருக்கின்றோம். முந்தநாள் நான் போன நேரம் பார்த்தேன் தபால் அலுவலகத்தின் கூரை விழுந்து காடு பிடித்து விட்டது. அது ஒரு கேட்பார் பிள்ளை இல்லாத ஒரு நிலையில் போய்விட்டது. இவை எல்லாம் மர்ஹூம் M.H.M.அஸ்ரப் அவர்களின் காலத்தில் செய்யப்பட்டு இன்னும் எந்தவொரு நிறுவனத்திற்கும் கையளிக்கப்படாமல் அரச சொத்தாகவே இருக்கின்றது. அதனால் அரச சொத்தின் சொந்தக்காரர் பிரதேச செயலாளர். வளத்தாப்பிட்டி சக்தி வீதிக்கு கல்வெட் அமைத்தல், வளத்தாப்பிட்டி பொது மயானத்தில் கொட்டகை அமைத்தல். இது முதல் ஒரு முன்மொழிவு வந்து மயானம் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டதற்கு பின்னர்தான் நாம் பிரதேச சபையின் பணம் செலவளிக்கலாம். இல்லாவிட்டால் பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சில் தான் அதை செய்யலாம். நாம் ஒரு சிபார்சு செய்வோம்.

கௌரவ உறுப்பினர் I.L.M.மாஹிர் அவர்கள் சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானம் பற்றி ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். இந்த மைதானத்தின் கிழக்குப் பக்கம் ஒரு எல்லைப் பிரச்சினை இருந்தது. அதை அரசியலாக்காமல் பிரதேச செயலகத்தின் தலைமையீட்டில் இன்று அந்த எல்லை நிர்ணயிக்கப்பட்டு ஒரு பாதை அமைக்கப்படுகின்றது. Volly Ball கோட்டு ஊடாக Foot Ball Field ஒன்றுக்கு பொருத்தமாக கொங்கிறீட் வீதி ஒன்று வரும் அந்த பிரதேசத்தை சுற்றி. சவக்காலைக்கும் தெற்கு எல்லையை செய்துவிட்டார்கள். கௌரவ உறுப்பினரின் Proposal என்னவென்றால் Ground இற்கு ஒரு சுற்றுமதில். Ground விளையாடுவதற்கு போதாது, எல்லைக்கு அப்பால் இருப்பது 1 ½ அடி இடம்தான். முதல் நாம் சிபார்சு செய்தது எல்லைத் தூண்கள் போட்டு வைப்பதற்கு. தற்போது அந்த Road வருவதால் 04 பக்கமும் வீதி இருக்கின்றது. கிழக்குப் பக்கம் புதிதாக வருகின்ற வீதி, தெற்கு, வடக்கு, மேற்கு 04 பக்கமும் வீதி இருக்கின்றது. நாம் மதில் கட்டினோமானால் அந்த Ground இன் பரப்பை இன்னும் சுருக்குவோம். நாம் Sports Officers இடம் கேட்டு அவர்கள் சிபார்சு செய்தால் செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Sports Federation இன் Request இனால்தான் இதை அம்பாரை மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் ஒதுக்கீட்டிலும் 03 இலட்சம் வந்திருக்கின்றது. அதில் சுற்று மதில் செய்வதற்கு அது போதாது. கிட்டத்தட்ட 15 இலட்சம் தேவைப்படுகின்றது. அதனால் மேலதிகமாக 03 இலட்சம் சபையினால் கொடுக்க வேண்டி இருக்கின்றது. அத்துடன் மதில் மாத்திரம் அல்ல அங்கே ஒரு மலசலகூடம் அவசரமாக செய்ய வேண்டி இருக்கின்றது. உள்ளூர் விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல வெளியூரில் இருந்து வருகின்ற விளையாட்டு வீரர்கள் கூட இயற்கை உபாதைகளை கழிப்பதற்காக பக்கத்தில் இருக்கின்ற வீடுகளுக்குள் சென்று அவர்களுடைய மலசலகூடத்தை பாவிக்க வேண்டி இருக்கின்றது. ஆகவே, அவசரமாக மலசலகூடத்திற்கும் சுற்று மதிலின் அடித்தளத்தை போடச் சொல்லி பிரதேச செயலாளர் தலைமையிலே எடுத்த தீர்மானத்திற்கு இணங்க பலரும் மிகவும் வற்புறுத்திக் கொண்டிருக்கின்றார்கள் அந்த எல்லையை உறுதிப்படுத்தி அத்திவாரத்தை போடச்சொல்லி, இளைஞர்கள் பணத்தை வசூலிப்பதற்காக பொது நிறுவனங்களையும் தனியாரையும் நாடி பணத்தை வசூலித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே சபையினால் நாங்கள் அந்தப் பங்களிப்பை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நானும் ஆரம்ப காலத்தில் இருந்து விளையாட்டில் மிகவும் ஆர்வமாக இருந்தவன். அந்த Ground எங்களது காலத்தில் Public Ground ஆக பாவிக்கப்படவில்லை. இன்று அந்த Ground இல் ஏதாவது Event ஒன்று நடந்தால் அந்தப் பகுதியில் வாழ் மக்களிடம் இருந்து அதிக முறைப்பாடுகள். அதாவது கூரையில் பந்து விழுவது, பெண் பிள்ளைகள் இருக்கின்ற வீட்டில் பந்து எடுக்க போவது. இது போன்று பல சர்ச்சைகள் நடந்திருக்கின்றது. நான் சென்ற சபையில் கூறிய மாதிரி பிரதேச செயலாளரின் உதவியோடும் நமது மதரசா நிர்வாகத்தின் ஒத்துழைப்போடும் ஆலையடி வட்டையின் 05 ஹெக்டயார் காணி இன்று மைதானத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் அவர்கள் சுட்டிக் ஒதுக்கிய இடத்தில் இன்று ஒரு மைதானம் அமைவதானால், ஒன்று அதன் செலவு, அந்தக்காலத்தில் CECB 110 மில்லியன் Estimate பண்ணி இருந்தது. இன்று அதை விட பாரிய பிரச்சினை Technical College, SLIATE, VTA, Courts இருக்கின்றது. Courts இருப்பதால் பொது மைதானத்தை அது இயங்கும் நேரத்தில் பாவிப்பது ஒரு பிரச்சினையாக வரும். அடுத்தது அந்த இடத்தில் ஒரு மைதானம் அமைப்பதானால் கல் உடைக்கின்ற செலவோ பாரிய செலவு. அதை அரச கட்டடங்களுக்கு வைத்துவிட்டு பொது மைதானத்தை இந்த இடத்திற்கு மாற்றுவோம். இந்த இடத்தில் மாற்றினால் அது ஒரு அழகான சூழல். அதில் அடிப்படை நில அளவை வேலைகளை பூர்த்தி செய்யும் அளவில் இருக்கின்றது.

அதன் பின்னர் அதன் Gradient எடுத்து படிப்படியாக அதை ஒரு 400m Track, foot Ball Field ஒரு International இற்குரிய 10 ஹெக்டயார் 08 ஏக்கர் வேண்டும். ஆனால் இதில் 10.2 ஏக்கர் காணி நாம் நமது சபையின் தலையீட்டில் இன்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதை அபிவிருத்தி செய்வதற்கு UDA ஒரு Plan உருவாக்கிக் கொண்டு வருகின்றது. அது உருவாகியதும் நாம் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களிடம் உதவியை நாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. Public Ground உருவாக வேண்டிய இடம் அது. இப்போதய இடத்தில் Toilet அமைப்பதானால் இருக்கும் பார்வையாளர் பகுதியில் தான் செய்ய வேண்டும். Pit ஐயும் அதே பகுதியில் அமைக்க வேண்டி இருக்கும். எல்லாம் அந்த 04 வீதிக்குள்தான் இருக்கிறது. இதை Sports Officers எல்லோரிடமும் கலந்து ஆலோசித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமும் கதைத்து விட்டு நாம் முடிவு ஒன்று எடுப்போம். மதில் கட்டுவது என்பது நிரந்தரமான வேலை. நீங்கள் சரியான முறையில் சென்று பார்த்தீர்களானால் ஓடி வருகின்ற ஒருவர் வீதிக்கு வந்து மீண்டும் மைதானத்திற்குள் செல்வது ஒரு விடயம். ஆனால் மதில் இருக்குமானால் அந்த அசைவுக்கு ஒரு தடையாக வரும். என்ன விளையாடினாலும் எல்லையை மீறி வேகத்தில் செல்லும் போது ஒரு தடை இருக்கும் என்றால் அது ஆபத்து. அதை நாம் சரியான முறையில் தொழிநுட்ப ஆலோசனை எடுத்துவிட்டு யோசிப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் சொல்கின்ற மாதிரி மதில் அமைக்காமல் Net வடிவத்தில் செய்வோமானால் ஓடிச் செல்கின்றவர்களுக்கு அந்த Net இலாவது ஒரு பாதுகாப்பு இருக்கும். இதை அவசரமாக செய்து முடிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Sports Officers இருக்கின்றார்கள். நாம் உத்தியோகபூர்வமாக அவர்களிடம் கேட்டு அவர்களின் ஆலோசனைப்படி நடப்போம். அதில் எந்த தடையும் இல்லை.

**தீர்மானம் - 04/38/11**

மட்டக்களப்புத்தரவை பொது மைதானத்தில் Toilet / சுற்று மதில் அமைப்பது தொடர்பாக Sports Officers, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரிடமும் கலந்தாலோசித்து அதற்கான முடிவு எடுப்பது, புதிதாக ஒதுக்கப்பட்டிருக்கும் ஆலையடி வட்டை நிலத்தை அளவை செய்வதற்கும், படிப்படியாக தேவையான கட்டுமான வேலைகளை செய்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கூறியது போல் அதற்கு Net போடுவதோடு, அந்த Pit இனையும் Stadium இற்கு கீழ் அமைத்து, 03 அறை இருக்கு அதில் ஒன்றை Toilet இற்கும் ஒன்றை விளையாட்டு வீரர்கள் குளிப்பதற்கும் பெரிசாக இல்லாமல் சாதாரணமாக செய்ய வேண்டும். எல்லைதான் பிரச்சினை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எல்லை தற்போது பிரச்சினை இல்லை. 04 பக்கமும் வீதி வந்துவிட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது காலத்திற்குள் நடக்குது. ஆனால் எத்தனையோ விடயங்கள் நிலைமாறுகால ரீதியில் மாற்றப்பட்டு மாறிக் கொண்டு போகின்றது. ஆகையினால் இன்னும் சில விடயத்தில் பழையதை போட்டு வந்திருந்தோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தயவு செய்து இந்த விடயங்களில் கருத்துச் சொல்லும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட விடயம் பழைய பெயர் சொல்லப்படுகின்றது என்று, ஆனால் யதார்த்தம் என்ன என்று சொன்னால் பழைய பெயர்தான் இன்னும் Official Record இல் இருக்கின்றது. 26 வருடம் அம்பாரை மாவட்டத்தின் சகல அரசியல் அதிகாரங்களும் நம்மிடம் இருந்தும் நமது இருப்பை உறுதிப்படுத்தும் பல விடயங்களை சரி செய்வதற்கு நாம் தவறி விட்டோம். தற்போது RDA இடம் சென்று நெல்லுப்பிடிச் சந்தியில் இருந்து எடுத்தீர்கள் என்றால் அதுதான் இருக்கும். நாம் அரசியலுக்காக கதைக்கலாம். ஆனால் யதார்த்தம் இதுதான். சரித்திரப் பெயர்களை எந்த முறையாலும் மாற்ற இயலாது என்று ஒரு வர்த்தமானி வந்தது.

அரச உத்தியோகத்தர்கள் எதுவும் செய்யும் போது, அரச வழிகாட்டலில் தான் செய்யலாம். நாம் பிரதேச சபை செய்யும் போது, தற்போது இருக்கின்ற பெயரையும், Bracket இற்குள் பழைய பெயரையும் போட்டும் கொடுக்கலாம், அல்லது போடாமலும் கொடுக்கலாம். அது வேறு விடயம். ஆனால் அரச ஊழியர்கள் செய்கின்ற போது அவர்களுக்கு பணிக்கப்பட்ட முறையில்தான் செய்யலாம். அந்த Proposal தயாரிக்கும் போது ஒரு அரசியல்வாதியையும் அழைக்காததற்கு காரணம், அவர்களுக்கு வந்த கட்டளை. தவிசாளரும் ஒரு பார்வையாளராகத்தான் போனேன். நான் பங்காளராக போகவில்லை. அதில் நான் எந்தக் கருத்தும் முன்வைக்கவில்லை. நீங்களும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் உத்தியோகபூர்வமற்ற முறையில் உங்களிடம் தந்தேன். உங்களுக்கும் ஒரு வழிகாட்டல் இருக்க வேண்டும் என்பதற்காக. ஆனால் இன்றும் உங்களிடம் இருந்து எந்த முன்மொழிவுகளும் வரவில்லை. அதை கட்டாயம் செய்ய வேண்டும்.

அடுத்ததாக இன்று நமது புதிய அங்கத்தவர் கனேசசுந்தரம் குலமணி அவர்கள் அவர்களின் கண்ணி உரையை ஆற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களுக்கும், இந்த சபையில் கூடி இருக்கின்ற அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சபையிலே என்னை கௌரவித்து எனது சக உறுப்பினர்களுக்கும் எனது கண்ணி அமர்வு இது. இதுதான் எனது முதலாவது அமர்வாக இருப்பதனால் எனது கருத்துகள் நான் முன்வைத்தவை கௌரவ தவிசாளர் அவர்களால் கூறப்பட்டது. எனக்கு இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் அவரை வரவேற்று உரையாற்றலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று எமது சபைக்கு புதிய கௌரவ உறுப்பினராக திருமதி குலமணி அவர்கள் வந்ததையிட்டு மிகவும் சந்தோசம் அடைகின்றோம். எங்களது சபை ஒரு குடும்பம் மாதிரி ஒற்றுமையான சபை. சபையில் பெண்களுக்கு பேசுவதற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஒரு சபை. எந்தப் பிரச்சினையானாலும், எவ்விதமான பேச்சுக்கள் பேச வேண்டுமானாலும் நீங்கள் திறந்து பேசலாம் என்பதையும் நாங்கள் இந்த சபை ஊடாக தெரியப்படுத்துகின்றோம். ஏனென்றால் இந்த சபைக்கு முதற்கண் நன்றி தெரிவிக்க வேண்டும். 05

பேர்தான் பெண்கள் இருந்தும் தற்போது 06 பேர் ஆகிவிட்டது என்று மிகவும் சந்தோசம் அடைகின்றோம். ஏனென்றால் 50% நெருங்குமோ என்ற சந்தோசமும், பெண் ஒன்று வந்ததால் நாங்கள் சந்தோசம் அடைகிறோமே தவிர எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை. எங்களது சபையை பொருத்தவரையில் இன்றைக்கு கௌரவ உறுப்பினர் குலமணி அவர்கள் முதற்தடவை என்பதால் கொஞ்சம் கூச்சமாக இருக்கலாம். இருந்தும் எங்களோடு நன்றாக பேசலாம். நாங்கள் சண்டையும் பிடிப்போம் ஆனால் பின்னுக்கு நண்பனாகவும் மாறுவோம். அதையும் தெரிவித்து இந்த சபைக்கு வந்ததையிட்டு எங்கள் கௌரவ உறுப்பினர்கள் எல்லோர் சார்பாகவும் வரவேற்றவளாக எனது உரையை முடிக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது புதிய உறுப்பினர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாகத்தான் வந்திருக்கின்றார். எங்களது உறுப்பினர்களே 04 பேர். 5% என்று இருந்தாலும் 50% பெண்களுக்கு உரிமை அளித்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல உலக சரித்திரத்தில் எந்த இடத்தில் கேட்டாலும் உலகின் முதலாவது பெண் பிரதமர் யார் என்று கேட்டால் சிறீமாவோ பண்டாரநாயக்க என்று தான் சொல்ல வேண்டும். அதுவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாகத்தான் பெறப்பட்டது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் சரித்திரத்தில் முதலாவது சுலமண்டயஸ் பண்டாரநாயக்க அவர்கள் பாபுஜி மரைக்காரின் தந்தையிடம் பண்டாரநாயக்காவை கூட்டிக் கொண்டு சென்று எனது மகனை அரசியலில் நீங்கள் களம் இறக்க வேண்டும் என்று சொல்லி அந்த நேரமும் இதே மாதிரி வட்டாரம் இருந்து மருதான வட்டாரத்தில் அவர் களம் இறக்கப்பட்டார். அவரோடு போட்டி போட்டவர் ஐக்கிய தேசிய கட்சியின் பிரபலமான, எல்லோரும் சொல்வார்கள் பயந்து நடுங்கினார்கள். இவர் அவரோடு போட்டி போட்டு ஆனால் அவர் கூறிய வார்த்தை பண்டாரநாயக்கா அவர்களுக்கு போட்டு விடாதீர்கள். எனக்காக போடுங்கள் என்று அந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபல அவரின் பெயர் எனக்கு சரியாக ஞாபகம் வரவில்லை. அவரை தோற்கடித்து பண்டாரநாயக்கா முதலாவதாக SLFP இல் வந்த இடம் முஸ்லிம் பாபுஜி மரைக்கார் தந்தையால்தான் உருவாக்கப்பட்டது.

அதே நேரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் இருந்து அரிய பல சேவைகளை செய்திருக்கின்றார்கள். நாங்கள் பெண்ணுக்கு மதிப்பளித்திருக்கின்ற விடயத்தில் பெருமைப்படவும் வேண்டும். எங்களது அனைத்து பெண்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் கௌரவிக்கின்றோம். நீங்கள் எந்தக் கூச்சமும் இந்த சபையில் படத்தேவையில்லை. எங்களது உறுப்பினர்களும் அப்படித்தான் கன்னியமானவர்கள். சிலர் வெளியில் இருந்து கூறுகின்றார்கள் சபை என்று சொன்னால் அதற்கு எதிர்க் கருத்து வரவேண்டும். இல்லாவிட்டால் அது நியதி இல்லை என்று, எங்களது கௌரவ உறுப்பினரும் சிரேஸ்ட சட்டத்தரணியும் இருக்கின்றார்கள். ஒருவருக்கு எதிராக ஏதாவது ஒரு வழக்குத் தாக்கல் செய்தே ஆக வேண்டும். அது ஒரு சட்ட பிரமாணம். சில விடயங்களை சுட்டிக் காட்டி பேசி இருக்கின்றோமே தவிர உண்மையாக நாங்கள் எதிர்வாதமும், எரிச்சல்வாதமும் இந்த சபையை பொருத்தவரையில் கடைப்பிடிக்கவில்லை. நான் நினைக்கின்றேன். இந்த சபை எப்படித்தான் இருந்தாலும் ஆர்முடுகலில் வந்து அமர்முடுகலில் இருக்கின்றது. சபையின் குறிப்பிட்ட காலம்தான் இருக்கின்றது.

இருக்கின்ற காலத்திற்குள் நாங்கள் இந்த சபையில் இந்த ஊருக்கு குறிப்பிட்ட ஒரு பெரிய International Ground இற்கு இத்தனை ஏக்கர் என்றால் அதை விட கூடிய வளம் ஒன்று கிடைத்திருக்கின்றது. நாங்கள் ஒரு சாதாரணமாக Interview இற்கு செல்வதென்றாலும் சரி, ஏதோ ஒரு உயர் பதவிக்கு செல்வதென்றாலும் சரி எங்களிடம் இருக்கின்ற நற்சான்றிதழ்களையும், எங்களது ஆடைகளையும் எங்களை மதித்து அந்த தொழில் கிடைக்க வேண்டும் என்று அந்த எண்ணத்தோடுதான் சென்று பார்ப்போம். இங்கு இருக்கின்ற அனேக உறுப்பினர்கள் அப்படித்தான். நாங்கள் சுவர்க்கம் என்று மறுமையை நம்பிய நாங்கள் சுவர்க்கம் என்ற இடத்திற்கு Interview இற்கு செல்லும் போது வெறும் கையோடு சென்று விழிக்காமல் ஏதாவது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இயங்குகின்ற ஒரு சபையாகத்தான் இந்த சபையை கருதிக் கொண்டு, ஏற்கனவே எவர் எதை கதைத்தாலும் இறுதியாக ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். சந்தனம் மரத்தில் தங்குவது முதலாவது நச்சுப் பாம்பு. மிகவும் கொடிய

விசமுடைய நச்சுப் பாம்புதான் சந்தன மரத்தில் அடையும். ஆனால் எவ்வளவுதான் நச்சை கக்கினாலும் சரி என்னதான் நடந்தாலும் சரி சந்தனம் அதன் வாசத்தை ஒரு காலமும் இழப்பதில்லை. சந்தனக் கட்டையை யாராவது உரசிப் பார்த்தால் அதன் வாசனையை கொடுத்துக் கொண்டே இருக்கும். அது போன்றுதான் நாம் செயற்பட வேண்டும். ஒரு நல்ல மரத்தை தேடித்தான் நச்சுப் பாம்புகள் வந்தே ஆகும். அதற்காக நாங்கள் பயப்படக்கூடாது. சந்தனம் என்றால் மணம் கொடுக்கும் என்ற ஒரு திடகாத்திரமான நம்பிக்கையோடு சேவை செய்ய அனைவரும் இயங்க வேண்டும் என்றுதான் நான் இயன்றளவு இந்த சபையில் கேட்டுக் கொண்டு, இவ்விடத்தில் கௌரவ உறுப்பினர் குலமணி அவர்களுக்காக பேச கிடைத்ததற்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று புதிதாக இணைக்கப்பட்டுள்ள பெண் உறுப்பினரான கௌரவ கனேசசுந்தரம் குலமணி அவர்களை வருக வருக என்று இந்த சபையின் சார்பாக அன்போடு வரவேற்கின்றேன். அவருக்கு எனது நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களுடைய சபையினுடைய சில விடயங்களை குறிப்பிட வேண்டும். எங்களது இந்த சபையானது இன, மொழி, மதத்திற்கு அப்பாற்பட்டு அத்தனை உறவுகளும் இங்கு இருக்கின்றார்கள். அனைவரும் இறைவனுடைய பிள்ளைகளாக கணிக்கப்பட்டு நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அதை நீங்கள் எதிர்வரும் காலங்களில் அனுபவிப்பீர்கள். எங்களுக்கு மிகவும் சந்தோசமான விடயம் என்னவென்றால் 02 வட்டாரத்திற்கும் ஆண் ஆதிக்கம் இல்லாததை நினைத்து உண்மையாக நான் பெருமைப்படுகின்றேன். நாங்கள் 03 பேரும் பெண் என்ற படியாலும் அதுமட்டுமல்லாமல் இன்னுமொரு பெண் கிடைத்ததையிட்டு மிகவும் சந்தோசம் அடைகின்றேன். நன்றி

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது இந்த சபைக்கு புதிதாக வந்திருக்கின்ற திருமதி குலமணி அவர்களை சபை சார்பாக வரவேற்றவனாக, இந்த சபையில் அவரது வருகைக்கு இடமளித்த முன்னாள் உப தவிசாளரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகவும் இருக்கின்ற வெள்ளி ஜெயச்சந்திரன் அவர்கள் உண்மையிலே பெரு மனதோடு உங்களுக்கு இந்த இடத்தை தந்து இங்கு வரவழைத்ததையிட்டு நீங்கள் நன்றி உடையவளாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் திரு வெள்ளி ஜெயச்சந்திரன் அவர்கள் ஊடாக வளத்தாப்பிட்டி பிரதேசத்தில், மல்வத்தை பிரதேசத்தில் கூடிய சேவைகளை அவர் மேற்கொண்டு இருந்தார். அந்த நிலையில்தான் உங்களுக்கு இந்த இடம் அவர் ஒதுக்கி இருக்கின்றார். அவரது அனுபவங்களைப் பெற்று தொடர்ந்து அவரது வழியில் செல்ல வேண்டும் என நான் கௌரவ புதிய உறுப்பினரை வேண்டிக் கொள்வதோடு,

எமது இந்த பொது மைதானம் சம்மந்தமாக நடைபெற்ற கருத்தில் எமது இந்த சபையின் நிதி நிலமைகள் எங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். இதே நேரத்தில் அப் பொது மைதானம் இவ்விடத்தில் அமைய வேண்டும் என்பது தொடர்ந்து முடிபடாத ஒரு சர்ச்சையாக இருந்து கொண்டு வருகின்றது. அந்த அடிப்படையில் அங்கு தேவைப்பட்டால் பொது வசதிகளை இந்த சபை ஊடாக மேற்கொள்ள வேண்டும் என்பது உண்மையிலே இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும் நிரந்தரமான அமைவிடத்தை தீர்மானித்ததன் பிற்பாடு சிறிய அளவில் இந்த சபை ஊடாக மேற்கொள்ளலாம். அதை விட இது ஒரு மத்திய அரசாங்கத்தில் எமது அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற காலம் அவர்கள் இப்போது உசாராக இருக்கின்ற காலம். அரசாங்கம் உசாராக இருக்கின்றது. உசார்படுத்தி இருக்கின்றார்கள். அவர்கள் ஊடாக நிறைய நிதிகளை கொண்டு வந்து அதற்கு செலவு செய்வதுதான் மிகவும் சாலச் சிறந்தது. எங்களது உள்ளுராட்சி சட்டதிட்டங்களுக்கு அமைவாக செய்யக்கூடிய நிதி பிரமாணங்களுக்கு அமைவாக சிறிய நிதி நிலைகளுக்கு ஏற்ப சிறிய செலவுகளை செய்யலாம். அதுவும் நிரந்தரமான இடம் ஒன்று தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் என்பது இந்த உரையின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துகளுக்கு நன்றி. நான் திருமதி குலமணிக்கு கூறும் ஒரு அறிவுரை, பிரதேச சபையின் உறுப்பினராக, அதுவும் மக்களின் பிரதிநிதிகளாக நாம் தெரிவு செய்யப்பட்டதும்

மக்களின் எண்ணம் உறுப்பினர் நினைத்தால் எதுவும் செய்யலாம், தவிசாளர் நினைத்தால் எதுவும் செய்யலாம் என்று. ஆனால் அது அப்படி அல்ல என்று உங்களுக்கு காலப்போக்கில் விளங்கும். மக்களின் கருத்துகளை உள்வாங்கி ஆக்கபூர்வமான முறையில் செயலாற்ற வேண்டும். நமது சபையில் இருக்கும் தமிழ், முஸ்லிம் கிராமங்களுக்கு ஒரு சரித்திரம் இருக்கின்றது. அந்த சரித்திரத்தை மையமாக வைத்து மக்களுக்கு பொதுவாக பயன்படக்கூடிய திட்டங்களுக்கு முன்னுரிமைப்படுத்த வேண்டும். எல்லோரும் வீதி விளக்கு, பாதை கேட்டு வருவார்கள். எல்லாவற்றையும் உள்வாங்கி ஆக்கபூர்வமான முறையில் நேர காலத்தோடு எந்தவொரு முன்மொழிவும் வைப்பதானால், 07 நாட்களுக்கு முன் முன்னறிவித்தல் வழங்கப்பட வேண்டும். வழங்கப்படாமலும் மறுக்கப்படாமல் அந்த விடயங்கள் இந்த சபையில் பேசப்பட்டிருக்கின்றது.

ஆனால் சபை ஒழுங்கை நன்றாக கற்று நீங்கள் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். கௌரவ உறுப்பினர்கள் கூறியது போல் இன்று எல்லா சபைகளிலும் 25% பெண்கள் இருக்க வேண்டும். தற்போது 25 தசத்திற்கு மேல் போய்விட்டது. இந்த சபையை பொருத்தமட்டில் ஆண், பெண் என்ற பிரிவு ஒருகாலமும் இருந்ததில்லை. சபைகளின் ஹன்சார்ட் களை வாசிப்பீர்களானால் ஆண்களை விட பெண்கள் பேசியதுதான் கூடுதலாக இருக்கும். நீங்கள் அந்த கருத்துகளை உள்வாங்கி அரசியல் அரசியலாக இருக்கட்டும். மக்கள் சேவையில் நாம் இந்த சபையினால் மக்களுக்கு எந்தளவுக்கு தாழ்மையாக பணி புரிய முடியுமோ அந்தளவுக்கு உங்களுக்கு எதிர்காலத்தில் நல்ல காலம் பிறக்கும். எனக்கு உங்களை கிட்டத்தட்ட 16 வருடங்களுக்கு முன் இருந்து தெரியும். ஆனால் நீங்கள்தான் அங்கத்தவராக வர இருக்கின்றீர்கள் என்ற இரகசியம் எனக்கு தெரியாது. ஆனால் நிச்சயமாக நல்ல ஒரு எதிர்காலம் இருக்கின்றது. நீங்கள் சக பெண் உறுப்பினர்களோடு சேர்ந்து உங்கள் குழாத்திற்கும், உங்கள் மக்களுக்கும் நல்லதொரு பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று கேட்டு,

உப தவிசாளர் மைதானம் தொடர்பாக கூறினார். அந்த விடயத்திற்கு எந்த வகையிலும் ஒரு செய்தி வெளியே வராமல் செய்ததற்கு காரணம் Social Media. ஒருவர் ஒரு கோணத்தை பிடித்துக் கொண்டு எல்லாப் பக்கத்திலும் எழுதுவார்கள். இது நான் முன்பும் சபையில் கூறினேன். மதரசா நிருவாகம், முச்சபைகள், DS எல்லோரும் ஒன்று சேர்ந்து எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் அரசாங்க அதிபரில் இருந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்யும் முயற்சி. அரச உத்தியோகத்தர்கள் DO, AI, Surveyor எல்லோரும் சேர்ந்து நாம் ஊருக்காக செய்யும் விடயம். எந்த ஒரு எதிர்ப்பும் இல்லாமல் இதை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்ததினால் எந்தவொரு விளம்பரமும் வெளிவரவில்லை. இன்ஷா அல்லாஹ் காலப்போக்கில் இந்த சபையினால் படிப்படியாக அது வடிவெடுக்கும் போது நிச்சயமாக இந்தப் பகுதியில் அம்பாரையை தவிர அப்படி ஒரு மைதானம் இனி வருவதற்கு ஒருவரிடமும் இடமும் இல்லை. நமக்கும் இடம் இல்லாமல் போகும். உண்மையாக அந்த துண்டு 18 ஏக்கர் காணியும் இல்லாவிட்டால் நமக்கு ஒரு அபிவிருத்திக்கும் ஒரு இடமும் இல்லை.

இதற்கு நாம் எல்லோரும் மர்ஹூம் M.A.அப்துல் மஜீட் அவர்களுக்கு நன்றி கூற வேண்டியவர்கள், நினைவுகூற வேண்டியவர்கள். அவர் பின் வந்த அரசியல்வாதிகளும் அதை மதித்து அரச தேவைக்காக அந்தக் காணிகளை ஒதுக்கி வைத்ததனால்தான் இன்று நமக்கு இப்படி ஒரு முயற்சியில் வெற்றி பெறக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதே போல் இன்று அமைச்சில் இருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நாம் முன்மொழிந்த இரவுக் கழிவு Treatment Plant Approval ஆகும் கட்டத்தில் இருக்கின்றது. இந்த நாட்டில் முதன் முதலாக அது பரீட்சாத்திக்கப்படப்போகின்றது சம்மாந்துறையில். அதை நாம் இயக்க ஆரம்பித்தால் சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர் பிரதேச சபைகளின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு இடமாக வந்து சேரும். ஒரு நாளைக்கு $50m^3$ சுத்திகரிக்கக்கூடிய ஒரு Plant ஆக அது உருவாகும். அதற்குரிய ஆரம்ப Signal இன்று தந்துவிட்டார்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்த மாதங்களில் அந்த விடயங்கள் பூர்த்தியடையலாம் என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது. உங்கள் எல்லோருக்கும் தெரியும் இன்று அரசாங்கம் நிதி நிலமை சென்ற கிழமை 200 இற்கு மேல் இருந்த US Dollar இன்று ஓரளவுக்கு 187 இற்கு குறைந்து இருக்கின்றது. ஆனால் 200 இற்கு கூடிய பாதிப்பு நமக்கு அம்பாரை மாவட்டத்தின்

வாழ் விவசாயிகளுக்கு விளங்காவிட்டாலும் நான் பிரயாணம் செய்யும் போது சிங்கள கிராமங்களில் மக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் எந்தளவுக்கு அவர்களின் நாளாந்த வாழ்க்கைக்கு ஒரு பாதிப்பாக இருக்கின்ற விடயம் நன்கு உணர்ந்தேன். அப்படி இருக்க நாம் வழமை போல் ஒரு போகம் முடித்து அடுத்த போகத்தின் விதைப்பாட்டு வேலைகள் செய்து கொண்டிருக்கின்றோம். வல்ல இறைவன் நமக்கு தொடர்ந்தும் இந்த நாட்டுக்கு தானியம் வழங்கும் பகுதியாக இருக்க உதவ வேண்டும் என்று கேட்டு,

செயலாளர் எனக்கு ஒரு செய்தியை காட்டினார். இறக்காமம் பிரதேச சபையில் இருந்து நாம் அவர்களின் வாகனம் ஒன்றை எடுத்து திருத்தி வாடகை ஒன்று நிர்ணயித்து இருந்தோம். அது மாதம் ரூபா 60,000.00 ஆகும். அவர்கள் இப்போது அதை ரூபா 80,000.00 ஆக மாற்றுவதற்கு ஒரு விண்ணப்பம் செய்திருக்கின்றார்கள். வெளியில் இருந்து ஒரு வாகனம் எடுப்பதானால் ரூபா 80,000.00 இற்கும் எடுக்க முடியாது என்பது யதார்த்தமாக இருந்தாலும் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களுக்கு தெரியும். ஒரு சபை என்ற ரீதியில் நாம் அவர்களின் வேண்டுகோளை எப்படி நோக்க வேண்டும் என்ற கருத்துகளை உங்களிடம் இருந்து கேட்க விரும்புகின்றேன். அவர்கள் இன்று என்னிடம் காலையில் வாய் மொழி மூலம் சொல்லும் போது நான் சொன்னேன். நீங்கள் எழுத்து மூலம் தாருங்கள் நான் தனியே எடுக்கின்ற முடிவு இல்லை என்று அந்தளவு டம்ரெக் ஒன்று வெளியில் இருந்து ஹயர் பண்ணுவது என்றால் மாதம் நமக்கு எவ்வளவு தேவைப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Per Day ரூபா 5000.00 ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் 03 மாதம் பாவித்திருக்கின்றோம். அதனை திருத்துவதற்கும் செலவளித்து இருக்கின்றோம். நியாயமான வாடகையாக நாம் எவ்வளவு கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறைந்தது 06 மாத காலம் ஒரு வாடகை ஒப்பந்தம் இருக்க வேண்டும். 06 மாதத்திற்கு பின்னர் அவர்களின் வாடகையை கூட்டிக் கொடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் திருத்தி ஓடத் தொடங்கியவுடன் அவர்களுக்கும் ஒரு ஆசை வரும் ஓடுவதற்கு. 03 மாதம் பாவித்திருக்கின்றோம். இவ்வளவு செலவளித்து இருக்கின்றோம். 60,000.00 படி எமது செலவை கழித்து விட்டு வழங்கலாம். Running Repairs ஐ தவிர, எனக்கும் தெரியும் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் சொன்னமாதிரி அந்தளவு டம்ரெக் என்றாலும் ரூபா 4000.00, 5000.00 தேவைப்படும். இன்னும் 03 மாதத்திற்கு பழைய வாடகை படியும் காலம் முடிந்தவுடன் அவர்கள் கேட்ட தொகைக்கு நாங்கள் மீள் பரிசீலனை செய்வோம்.

இன்று உங்கள் தவிசாளர் என்ற ரீதியில் இப்தார் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராப்போசனத்தோடு, நீங்கள் இங்கு சாப்பிடாவிட்டாலும் எடுத்துக்கு போகலாம். இந்த அமர்வு முடிந்ததும் தயவு செய்து இப்தாரில் பங்கெடுக்க வேண்டும் என்று பணிவான வேண்டுகோளை விடுத்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/38/12**
இறக்காமம் தவிசாளரின் கடிதத்திற்கமைய இறக்காமம் பிரதேச சபையிடம் இருந்து வாடகைக்கு பெறப்பட்ட டம்ரக் இயந்திரத்திற்கு முதல் 06 மாதங்களுக்கு ரூபா 60,000.00 உம், அதற்கு பின் ஒரு மாதத்திற்கு ரூபா 80,000.00 வாடகையாக வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு எங்களுடைய சம்மாந்துறையில் நூலகங்கள் காணப்படுகின்றது. இந்த நூலகத்தில் பதிலீட்டாளர்கள் இல்லாமல் நூலகத்தில் இருக்கின்றவர்களை இடமாற்றம் செய்வதற்கு கடிதம் கொடுப்பதற்கு கஸ்டமாக இருக்கும். எங்களது நூலகத்தை நடைமுறைப்படுத்துவது மிகவும் கஸ்டமாக இருக்கும். ஆகவே நாங்கள் இந்த சபை ஊடாக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் அதாவது எங்களுக்கு பதிலீட்டார்கள் கிடைத்தவுடன் எங்களுடைய நூலக உத்தியோகத்தர்களை இடமாற்றலாம் என்று,

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இடமாற்றம் தொடர்பாக இணைந்த சேவையில் இருப்பவர்கள், நூலகத்தில் இருப்பவர்கள் எல்லோரும் நேரடியாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கீழ் வருபவர்கள். இடமாற்ற கட்டளை வந்தவுடன் அவர்களின் உரிய காலத்திற்கு விடுவிக்க வேண்டியது நமக்கு கட்டாயக் கடமை. அவர்கள் அரச ஊழியர்கள் நமக்கு ஒரு காலத்திற்காக தந்திருக்கின்றார்கள். அவர்களின் காலம் முடிந்தவுடன் போக வேண்டும். பதிலீட்டு வர வேண்டும் என்பது நாம் கவனிக்க வேண்டிய விடயம் எம்மை பாதிக்கின்ற விடயம். நாம் இந்த சபையில் ஒரு தீர்மானம் எடுக்கலாம் பதிலீட்டுக்கு பரிந்துரைக்கப்படுபவர்கள் வரும் வரையில் நாம் இடமாற்றம் செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் இருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் எடுப்போம்.

## தீர்மானம் - 04/38/13

நூலகத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படும் போது பதிலீட்டுக்கு நியமனம் செய்யப்படும் வரை இடமாற்றம் செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/38/14

LDSP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட்டார ரீதியாக கூட்டங்களை நடாத்தி WLDP இனை தயாரிப்பதற்கும் அதன் பின் அனைத்து வட்டாரங்களையும் இணைத்து ஏற்கனவே செய்யப்பட்ட LAPDP இனை இற்றைப்படுத்தி புத்தகமாக்குவதற்கும் அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அடுத்த விடயம் என்னவென்றால் இங்கு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. எங்களுடைய சபை 04வது சபையின் 38வது அமர்வு. ஆனால் இந்த சபையில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் இதில் சொல்லப்பட்டுள்ளது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று. நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று எங்களுக்கு எழுதப்படுகின்றது. ஆனால் அது நடைபெற்றதா? இல்லையா? என்பது எங்களுக்கு விளக்கம் போதாமல் இருக்கின்றது. 38 அமர்வுகள் நாங்கள் இருந்திருக்கின்றோம். எங்களுக்கு எந்தந்த வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றது, எந்ததந்த வேலைகள் செய்யப்படவில்லை. செய்யப்படவில்லை என்றால் என்ன காரணம் என்று எங்களுக்கு தெரிய வேண்டும் கௌரவ தவிசாளர் அவர்களே,

ஏனென்றால் இங்கு தீர்மானம் 11 விவாகரத்து சிறுவர்கள் சம்பந்தமான பிணக்குகளை எவ்வாறு தீர்க்கலாம் இது தொடர்பாக நம்பிக்கையாளர் சபை, உலமா சபை, கோயில் நிர்வாகங்களுடன் கலந்துரையாடி அதற்குரிய முடிவுகளை எடுப்பதற்கான பிரேரணை. இப் பிரேரணை தந்தது சென்ற மாதம் ஆனால் இதற்கு ஒரு கூட்டம் நடாத்துவதற்கு ஒரு மாதமும் 09 நாள் எடுத்தும் இந்தக் கூட்டம் நடைபெறவில்லை. ஆனால் இங்கு இருக்கின்ற ஊழியர்களது தவறா? அல்லது எங்கள் எல்லோரினுடைய தவறா? என்று தெரியவில்லை. ஆனால் இங்கு இருக்கின்ற வேலைகள் என்னைப் பொருத்தவரையில் நான் ஒருவரையும் குற்றம் சொல்லவில்லை. என்னைப் பொருத்தவரைக்கும் மிகவும் மெதுவாகத்தான் இங்கு வேலைகள் நடைபெறுகின்றது என்பதை கூறிக் கொண்டு, எங்களுடைய காலங்கள் குறுகிய காலங்கள் காணப்படுவதால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் நடைபெற வேண்டும் என்று கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்த அமர்வில் கௌரவ உறுப்பினர் சொன்னமாதிரி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. கடிதம் அனுப்பப்பட்டிருந்தால் அந்தக் கடிதத்தின் பிரதி சமர்ப்பிக்க வேண்டும். அந்த தாமதத்தை அனுபவிப்பவன் நான். சிறுவர் விவகார விடயம் நான் தனிப்பட்ட முறையில் புதிய நம்பிக்கையாளர் தவிசாளரோடும், ஜம்மியதுல் உலமா தலைவரோடும் கருத்து பரிமாறி இருக்கின்றேன். அவர்கள் முச்சபைகள் குவாசியோடு பேசிவிட்டு ஒரு கலந்துரையாடலுக்கு வருவோம் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். அப்படி ஒரு காலம் வந்தவுடன் நிச்சயமாக அதை செய்வோம். இனிமேல் இந்த சபை முடிவுகளின் முன்னேற்றங்கள் அறிவிக்கும் போது நடந்த விடயம் என்ன என்பதை சுட்டிக் காட்டுவதற்கு செயலாளரை பணித்தவனாக, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை